**தலைப்பு 299 – இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 299 – இலங்கையின் தேசிய புலமைச் சொத்து திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 சனவரி 27 ஆந் திகதி தேசிய புலமைச் சொத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 25.87 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதில் ரூபா 25.28 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 0.59 மில்லியன் அதாவது 2.28 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்குரிய 29901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.69 | 2.67 | 1.00 | 2.04 | 10.00 | 6.18 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்தின் கீழான 02 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0154/000 | **(2,825)** |
| 6000/0000/00/0018/0050/000 | **2,825** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

29901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,410 ஆக இருந்த போதிலும், அக்கடன் மீதியை அறவிடுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் அலுவலகத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.3 உள்ளகக் கணக்காய்வு

அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | தகுதிகாண் காலத்தில் உள்ள 14 உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபெறச் செய்யப்பட்டிருந்தனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| நிதிப்பிரமாணம் 1646 | அலுவலகத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் ஓட்டக் குறிப்புகளும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.4 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

அலுவலகத்தின் நோக்கங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 271,320 செலவிடப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாக பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

### (ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்

அலுவலகத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்களை பதிவுசெய்தல் தொடர்பிலான செயலாற்றல் தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | வியாபாரக் குறிகளைப் பதிவுசெய்தல் | | ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங் களை பதிவுசெய்தல் | | கைத்தொழில் திட்டங்களை பதிவுசெய்தல் | |
|---|---|---|---|---|---|---|
| | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 9,415 | 8,552 | 481 | 536 | 457 | 529 |
| பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அளவு | 12,623 | 21,931 | 439 | 313 | 443 | 349 |
| வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட அளவு | 5,088 | 2,184 | 41 | 41 | 351 | 200 |
| பதிவுசெய்யப்பட்ட அளவு | 2,272 | 1,140 | 262 | 263 | 246 | 529 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்தல் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பிரதான பணியான போதிலும், ஆண்டின் போது வர்த்தமானியில் வெளியடப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட அளவு, ஆண்டில் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஒப்பாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த விண்ணப்பங்களின் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக முன்னைய ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

வியாபாரக் குறிகள் தொடர்பாக கணிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 42 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. வியாபாரக் குறிகளைப் பதிவு செய்வதற்கு கருத்திற்கொள்ளக்கூடியளவு தாமதமொன்று இடம்பெற்றிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்ட அளினுள் 2007 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்த விண்ணப்பங்களும் காணப்பட்டன.

- வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்வதற்காக பரீட்சிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அந்நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் பரிசோதனைக்காக துண்டுக்கூலி அடிப்படை கொடுப்பனவு முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 1,164,609 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் வர்த்தமானியில் வெளியடப்படுகின்ற அளவிலும் பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்ட அளவினையும் ஒப்பிடும் போது கருத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

- வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்தல் தொடர்பாக காலப்பகுதி முடிவடைந்வுடன் பதிவு வரை வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை நடைமுறை வேலையாக கருத முடியுமாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் தகவல்கள் முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதியத்தின் நடவடிக்கைகள் தானியக்கமாக செயற்படுத்துவதன் கீழ் கணனி மயப்படுத்தப்பட்ட பண அறவீட்டு முறைமை மற்றும் உள்ளக மின்னஞ்சல் முறைமையொன்று அறிமுகப்படுத்தல் மற்றும் முறைமையை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது, ஆண்டினுள் அதற்காக ரூபா 3,969,434 செலவிடப்பட்டு கணனிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) தொழில்நுட்ப மற்றும் புதிய உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துதல் என்பவற்றின் கீழ் 09 மாகாணங்களையும் மேவுகை செய்யப்படும் வகையில் 09 நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் 06 நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது.

**(இ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்திற்காக புதிய அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பொருத்தமான காணியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாததன் காரணமாக அச்செயற்பாடு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது நிறுவகத்திற்கு புறம்பாக வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் 12 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்களுக்காக பங்குபெறச் செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கிடையே மீளாய்வாண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு அமையப்படிகளாக ரூபா 206,389 செலவிடப்பட்டிருந்தது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அலுவலகத்தினால் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

(அ) அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.12.3(அ) வழிகாட்டலின் பிரகாரம் வழங்கப்பட்ட பொருட்கள் விதந்துரைகளுக்கும் ஏனைய இனங்கப்பட்ட நியமங்களுக்கு இணங்கியதாக குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தராலும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 செப்தம்பர் 15 ஆந் திகதி கூறுவிலை கோரி ஒன்று ரூபா 19,900 வீதம் 03 அச்சிட்டு இயந்திரங்கள் ரூபா 59,700 இற்கு கொள்வனவு செய்ப்பபட்டிருந்தது. அப்பொருட்கள் ஒப்பந்தக்காரரால் கூறுவிலை கோரிய திகதி முதல் 03 மாத கால அளவில் தாமதத்தின் பின்னர் 2015 திசெம்பர் 11 ஆந் திகதி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அலுவலகத்தினால் புலமைச் சொத்து விற்பனை மேம்படுத்தல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்குரிய காணியொன்று

ரூபா 22,298,751 செலவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பின்னர் காணி, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி அமைச்சரபையினால் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய புலமைச் சொத்து அலுவலகம் உழைக்கும் வருமானத்திலிருந்து 1/3 பங்கொன்று திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அவ்வருமானத்தை கணக்கீடு செய்வதற்காக வருமானக் குறியீட்டொன்றை பெற்றுக்கொள்வதற்கு அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாது, 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 30,679,973 தொகை அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சொத்துக்களுக்காக பொருட் பதிவேடு ஒவ்வொரு பிரிவிற்காக வெவ்வேறாக பேணப்படாமல் இருந்ததுடன் களஞ்சியத்தில் உள்ள பொருள் பதிவேட்டில் மாத்திரம் அனைத்து பொருட்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அச்சொத்துக்களின் பொறுப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத்திருதன்மை தொடர்பாக பாதகமாக தாக்கமளித்திருந்தது. 2008 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்த மடிக் கணனியொன்று 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலனாய்வின் போது குற்றச்சாட்டு பத்திரமொன்றை மேற்கொள்வதற்கு கூடியளவிலான போதிளவு சான்றுகள் இல்லையென குறிப்பிடப்பட்டிருந்ததுடன், வேறு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 05 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 73 | 39 | 34 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 11 | 04 |
| | மொத்தம் | 104 | 59 | 45 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்தல் அலுவலகத்தின் செயற்பாடுகளாக இருந்ததுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களாக இருந்தமையால் அதற்காக 2013 மே 01 ஆந் திகதி துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவு செய்து செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.